# 10-ஆம் வகுப்பு இரண்டாம் திருப்புதல் தேர்வு விடைக் குறிப்பு
## கடலூர் மாவட்டம் 2023 – 24

ம. மரிய அந்துவான்

I. சரியான விடையை தேர்ந்தெடு

1. ஆ. ரஷ்யா
2. அ. ஹெர்மன் கோர்ட்ஸ்
3. ஈ. 1991
4. அ. காரணம் கூற்று ஆசியவை சரி
5. ஈ. T. பிரகாசம்
6. ஈ. கட்ச்
7. ஈ. கோயம்புத்தூர்
8. ஈ. ஹைதராபாத்
9. ஆ. தொட்டபெட்டா
10. இ. நீலகிரி
11. ஈ. மேற்கண்ட எதுவுமில்லை
12. இ. 7
13. ஆ. கோல்கொண்டா சுல்தான்
14. இ. நிதித்திறன்

II. சுருக்கமான விடையளி (ஏதேனும் 10)

ம. மரிய அந்துவான்

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று.

பிரான்சின் – அதி தீவிரப்பற்று

ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று.

16. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?

வரிவசூலித்தல், நிலப்பகுதிகளை நிர்வகித்தல், வழக்குகளை விசாரித்தல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல்,காவல் காத்தல் (படிக்காவல் என்றும் அரசுக்காவல்).

மரிய அந்துவான்

நாயக்க ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள உதவுதல்.

17. தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தின் குறிக்கோளை விவரிக்கவும்.

அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.

டொமினியன் அந்தஸ்து அடைவது.

இலக்குகளை அடைய வன்முறையல்லாத அரசியல் சாசன வழிமுறைகளைக் கையாள்வது.

18. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பை பட்டியலிடுக.

அரசமைப்பு வழிமுறைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர்.

மரிய அந்துவான்

அறைக்கூட்டங்கள் நடத்துவதும் பிரச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுவதும் அவர்களின் செயல்பாடுகளாக இருந்தன. மக்களை ஈடுபடச்செய்வதற்காக வட்டாரமொழியைப் பயன்படுத்தினர்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with CamScanner

19. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.

பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுத்தார்

பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என வலியுறுத்தினார்.

பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் பெண் ஏன் அடிமையானாள்? என்பதாகும்.

முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சம உரிமை வேண்டுமென்றார்.

20. காலநிலையை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.

1. அட்சங்கள் 2. கடல் மட்டத்திலிருந்து உயரம் 3. கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு

4. பருவக்காற்று 5. நிலத்தோற்றம் 6. ஜெட் காற்றுகள்

21. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.

தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனைப் பொருள்கள் ஆகியவை

22. பன்னாட்டு வணிகம் – வரையறு.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

23. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக

கிழக்கில் – வங்காள விரிகுடா

மேற்கில் – கேரளா

வடக்கில் – ஆந்திரப் பிரதேசம்

வடமேற்கில் – கர்நாடகா

தெற்கில் – இந்தியப் பெருங்கடல்

ஆகியன தமிழ்நாட்டின் எல்லைகளாக அமைந்துள்ளன.

24. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.

| | |
|---|---|
| மேட்டூர் அணை | பவானி சாகர் அணை |
| அமராவதி அணை | கிருஷ்ணகிரி அணை |
| சாத்தனூர் அணை | முல்லைப் பெரியார் அணை |
| வைகை அணை | மணிமுத்தாறு அணை |
| பாபநாசம் அணை | பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம். |

25. சார்க் உறுப்பு நாடுகளை பட்டியலிடுக

இந்தியா, பூடான், நேபாளம், மாலத்தீவு, பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்காளதேசம்.

26. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?

இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்

ஐந்து ஆண்டுகள் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.

அவர் பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.

குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம்.

ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with CamScanner

பொது ICDS திட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (General ICDS Projects and World Bank Assisted Integrated Child Development Services).

பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்.

மதிய உணவுத் திட்டம்.

28. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் வரையறு?

ஜனவரி 16, 2016.

அரசின் முன் முயற்சி திட்டம். தொழில் தொடங்க முயற்சி, வேலைவாய்ப்பு, வளங்களை பெருக்குதல்.

## III விரிவான விடையளி

29. நிரப்புக

i. ஆப்பிரிக்க நேர்கள்

ii. முத்துலட்சுமி அம்மையார்

iii. தென்பெண்ணை

iv. தியோடர் லெவிட்

v. பொக்ரான்

30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி

ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும்

வன்முறை சார்ந்த தேசியம்

ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு

பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை

பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு

பால்கன் போர்கள்

உடனடிக் காரணம்

31. 1857ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்

மேலதிகாரக் கொள்கை

உள்நாட்டு ஆட்சியாளர்கள் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகளை இணைத்துக் கொண்டனர்.

வாரிசு இழப்புக் கொள்கை

நேரடி ஆண் வாரிசு இல்லையெனில் அவர்கள் இறப்பிற்கு பின் அப்பகுதி ஆங்கிலேய ஆட்சிப் பகுதியுடன் இணைக்கப்படும். இதன் மூலம் சாரதா, சம்பல்பூர், ஜான்சி, நாக்பூர் ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டன.

இந்திய கலாச்சார உணர்வுகள்

சமயக்குறியீடுகளை தடைவிதிக்கப்பட்டது.

ஆடைக் கட்டுப்பாடுகள் மதம் மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக கருதப்பட்டது.

ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் மற்றும் தரக்குறைவாக நடத்தப்பட்டன.

புதிய ரக என்பீல்டு ரக துப்பாக்கியின் அறிமுகம், பசு மற்றும் பன்றி கொழுப்பு தடவிய தோட்டாக்கள், விலங்குகள் தோலில் செய்யப்பட்ட உறைகளும் உடனடி காரணமாயிற்று.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with CamScanner

**32. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.**

விதவைப் பெண்களை உயிரோடு தீயில் தள்ளி விடும் சதி வழக்கம் நிலவியது.
பெண் சிசுக் கொலை, குழந்தைகள் திருமணம் முறை ஆகியன காணப்பட்டது.
கடவுளுக்கு குழந்தைகளை பலியிடும் சடங்குகளும் நடைமுறையில் இருந்தன.
ஆண்கள் பல பெண்களைத் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.
கணவனை இழந்த கைம்பெண்களின் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டது.
ஒடுக்கப்பட்டவர்கள் மீதான சாதிக் கொடுமைகள் அதிகமாக காணப்பட்டது.
பிராமணர்கள் ஆதிக்கம் செலுத்திட பலவிதமான சடங்குகளை நடத்தினர்.
பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வி முழுவதும் மறுக்கப்பட்டது.

**33. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.**

தென் இந்தியாவில் பாயும் ஆறுகள்
பெரும்பாலான ஆறுகள் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படும்.
நீரின் அளவு மழைப் பொழிவிற்கு ஏற்றாற்போல் மாறுபடுகிறது.
தீபகற்ப ஆறுகளை அவைபாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
அவை
1) கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்,
மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி
2) மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்
நர்மதை, தபதி மற்றும் மாஹி

ம. மரிய அந்துவான்

**34. வேறுபடுத்துக**

| | | |
|---|---|---|
| 34(1) | வானிலை | காலநிலை |
| | தினமும் மாறும் | மாறாதது(35 வருட பதிவு) |
| | படிப்பு வானிலையியல் | படிப்பு காலநிலையியல் |

| | | |
|---|---|---|
| 5 | வண்டல் மண் | கரிசல் மண் |
| | வெளிர் நிறம் | கருப்பு நிறம் |
| | நெல் கோதுமை | பருத்தி புகையிலை |

**காரணம் கூறுக**

மலைப்பகுதிகள் சமவெளியை விட குளிரானது.
உயரே செல்லச் செல்ல பனிமண்டல வெப்பம் குறைவதால்.

**35. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.**

தேயிலை, காபி, இரப்பர், மற்றும் முந்திரி ஆகியன மாநிலத்தின் முக்கிய தோட்டப் பயிர்களாகும்.
தமிழ்நாடு தேயிலை பயிரிடும் பரப்பு மற்றும் உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கிறது.
நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன.

Padasalai.Net
ilahi high school YouTube Channel


Scanned with CamScanner

மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் காபி பயிரிடப்படுகின்றது.
நீலகிரி மலைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலைச்சரிவுகள், திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி மாவட்டங்கள்.
காபி தமிழ்நாடு இரண்டாமிடம் வகிக்கிறது.
இரப்ப ர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகமாகக் காணப்படுகிறது.
தமிழ்நாட்டிலுள்ள, மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சிமலைகளின் சரிவுகளில் மிதவெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் மிளகு விளைகின்றது.
கடலூர் மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகின்றது.

36 நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?

கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்றமடைவது நகரமயமாக்கம்.
இந்தியாவில் நகரமயமாக்கலால் ஏற்படும் பிரச்சனைகள்:
நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.
நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.
நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.
குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.
போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.
குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.
வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.
திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்கிறது.
குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன.

ம. மரிய அந்துவான்

37. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.

உருவாவதற்கான காரணம்
உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு ஒரு மாற்றாகவும், அமெரிக்க மேலாதிக்கத்திற்குப் போட்டியாகவும், உருவானது
பிரிக்ஸின் நோக்கங்கள்
பிராந்திய வளர்ச்சியை அடைவது,
வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் இடையே பாலமாக செயல்படுவது
உள்நாட்டு நாணயங்கள் மூலம் வணிகம் மேற்கொள்வதை ஊக்குவித்தல்
தகவல் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல்,
வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு பொருளாதார மாற்றங்கள் போன்ற பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துதல்.

38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

அமைச்சரவை தொடர்பானவை
முதலமைச்சர் அமைச்சர்களை நியமித்து துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.
அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.
ஆளுநர் தொடர்பானவை
கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.
மாநில அரசு வழக்குரைஞர், மாநில தேர்தல் ஆணையர்

Ilam high School YouTube Channel
Padasalai.Net


Scanned with CamScanner

அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

சட்டமன்றம் தொடர்பானவை

சட்டமன்ற கூட்டத்தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.

சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.

சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார். மரிய அந்துவான்

**39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக**

உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.

வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சம்.

உலகளாவிய போட்டி அதிகரித்து, தொழில்துறையில் அமைதியற்ற சூழல்.

சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.

குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.

மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது.

உலகமயமாக்கல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மரிய அந்துவான்

**40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.**

நேர்முக வரிகள்

நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும்.

வருமான வரி – தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது.

வருமான அளவைப் பொறுத்து மாறுபடக்கூடியதாகும்.

சொத்து வரி – தனது சொத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரி.

நிறுவன வரி – பங்குதாரர்களின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில் நுட்ப சேவைகள் மற்றும்

மறைமுக வரிகள்

முத்திரைத் தாள் வரி – திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும். மரிய அந்துவான்

பொழுதுபோக்கு வரி – திரைப்படங்கள் பொழுது போக்கு பூங்காக்கள், கண்காட்சிகள், விளையாட்டு அரங்கம், விளையாட்டு நிகழ்ச்சிகள் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரி.

சுங்கத் தீர்வை அல்லது கலால் வரி

உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும்.

பண்டங்கள் மற்றும் பணிகள் வரி மறைமுக வரிகளில் ஒன்று. குறிக்கோள் "ஒரு நாடு-ஒரு அங்காடி-ஒரு வரி" இது 'ஒரு முனை வரி' ஆகும்.

## 8 Marks

**43. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக**

iam high school YouTube channel
Padasalai.Net

பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பொறுப்பேற்றார்.

கம்பெனி நிர்வாகத்திற்கும் கட்டபொம்மனுக்கும், மோதல் போக்கு வளர்ந்து கொண்டே வந்தது.

கட்டபொம்மனிடமிருந்து நிலவரி வசூலிக்க வேண்டிய அதிகாரம் ஜாக்சன் என்ற கர்வமுள்ள ஆட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டது மரிய அந்துவான்

1798 ஆகஸ்ட் 18இல் இராமநாதபுரத்தில் வந்து தன்னைச் சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு அவர் ஆணை பிறப்பித்தார்.

ஜாக்சனின் முன்பு கட்டபொம்மன் மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் தனது அமைச்சரான சிவசுப்ரமணியனாருடன் தப்பிச்செல்ல முயன்றபோது, சிவசுப்ரமணியனார் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் ஆட்சியர் ஜாக்சன் தன்னை அவமானப்படுத்தியதை பற்றி கம்பெனி நிர்வாகத்திடம் தெரியப்படுத்தினார். மரிய அந்துவான்

சிவகங்கை மருது பாண்டியர்கள் ஏற்படுத்தியிருந்து தென்னிந்திய கூட்டமைப்பில் சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என முடிவெடுத்தார்.

1799 மே மாதம் வெல்லெஸ்லி பிரபு கட்டளையின் படி கம்பெனி படையும் இணைந்து கட்டபொம்மனை சரணடையும் படி கோரின

கட்டபொம்மன் சரணடைய மறுத்து புதுக்கோட்டைக்கு தப்பியோடினார்.

புதுக்கோட்டை அரசர்களால் கட்டபொம்மன் பிடிபட்டு திருநெல்வேலிக்கு அருகே கயத்தாறில் உள்ள புளிய மரத்தில் தூக்கிலிடப்பட்டார்.

**43. இந்தியாவின் பிரிவினைக்குப் பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்**

1905ஆம் ஆண்டு கர்சன் பிரபுவின் வங்கப்பிரிவினை இந்திய பரிவினைக்கு முதல் காரணியாக அமைந்தது.

முதல் உலகப்போருக்கு பின் துருக்கி இசுலாமிய மதத் தலைவருக்கு ஆதரவாக இந்தியாவில் தனியே கிலாபாத் இயக்கம் ஆரம்பித்து போராடியது.

மத்திய சட்டப்பேரவையில் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என முஸ்லிம் லீக் கோரியது.

இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் தூதராக கருதப்பட்ட முகமது அலி ஜின்னா தனது நிலைப்பாட்டை மாற்றி முஸ்லிம்களுக்கு தனி நாடு வலியுறுத்தினார்.

1932-ல் வெளிவந்த ராம்சே மெக் டொனால்டு வகுப்பு வாத அறிக்கை

இங்கிலாந்திலிருந்து நாடு திரும்பிய ஜின்னா 1934ல் முஸ்லிம் லீக்கிற்கு புத்துயிர் ஊட்டி 1940ல் தனிநாடு கோரிக்கையை தீவிரப்படுத்தியது.

இந்து மகா சபையும் முஸ்லிம் லீக்கும நாட்டின் ஒற்றுமை தவிர்து ஒன்றுக்கொன்று எதிரான நடவடிக்கையில் இறங்கியது.

இந்து-முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி வந்த முகம்மது இக்பால் தனிநாடு கோரிக்கையை பிரச்சாரம் செய்தது.

1946 தேர்தல்களில் முஸ்லிம் லீக் தனது தனித் தொகுதியில் வெற்றி பெற்று தனது கோரிக்கைக்கு வலு சேர்த்தது.


1946 ஆம்ஆண்டு, ஆகஸ்டு 16ஆம் நாளை நேரடி நடவடிக்கை நாளாக ஜின்னா அறிவித்தது.


1947ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் நாள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றி இந்தியாவை, இந்தியா-பாகிஸ்தான் என இரு நாடாக பிரித்து விடுதலை அறிவித்தது.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

இது போன்ற காரணிகளே இந்தியாவின் பிரிவினைக்கு காரணமாகும். ம. மரிய அந்துவான்

## 41. காலக்கோடு. 1920 முதல் 1940





## 44. வரைபடம்




## 42. வரைபடம்




ilahi high school YouTube channel
Padasalai.Net



Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# Cuddalore

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

பத்தாம் வகுப்பு

சமூக அறிவியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்:100

பகுதி – I

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14

1. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டு சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது ?
அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்
2. யாருடைய ஆக்கிரமிப்பின் போது மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று ?
அ) ஹெர்னான் கோர்ட்ஸ் ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
இ) டெளசெயின்ட் லாவெர்ட்யூர் ஈ) முதலாம் பெட்ரோ
3. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது ?
அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991
4. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
கூற்று : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.
காரணம் : இக்காலக்கட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தை புறக்கணித்தது.
அ) காரணம், கூற்று ஆகியவை சரி
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல
இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு
ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை
5. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார் ?
அ) K. காமராஜ் ஆ) C. இராஜாஜி இ) K. சந்தானம் ஈ) T. பிரகாசம்
6. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோள பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது ____
அ) நீலகிரி ஆ) அகத்திய மலை இ) பெரிய நிக்கோபார் ஈ) கட்ச்
7. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
அ) சென்னை ஆ) சேலம் இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்
8. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் ____
அ) பெங்களூர் ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்
9. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் ____ ஆகும்.
அ) ஆனைமுடி ஆ) தொட்டப்பெட்டா இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்
10. பாலின விகிதம் அதிகம் கொண்ட மாவட்டம் ____
அ) சேலம் ஆ) தர்மபுரி இ) நீலகிரி ஈ) மதுரை
11. மாநில ஆளுநர் ஒரு
அ) மாநிலத் தலைவர் ஆ) அரசின் தலைவர்
இ) குடியரசுத் தலைவரின் முகவர் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
12. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன ?
அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8
13. 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மேன்" வழங்கியவர் யார் ?
அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான் இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்
14. வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறனை ____ என்கிறோம்.
அ) வரிவிதிப்பு ஆ) நிதி உயர்வு இ) நிதித்திறன் ஈ) கட்டணங்கள்

பகுதி – II

II எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும். வினா எண் 28க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். 10x2=20

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை ?
16. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை ?
17. தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.
18. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.





19. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.
21. இந்தியாவின் தோட்டப்பயிர்களைக் குறிப்பிடுக.
22. பன்னாட்டு வணிகம் – வரையறு.
23. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
24. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்கு திட்டங்களின் பெயர்களை எழுதுக.
25. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை ?
26. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.
28. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் வரையறு ?

பகுதி – III 10x5=50

III ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 42க்கு கட்டாயம் விடையளிக்க)

29. அ) பெரியார் ____ என்றும் அழைக்கப்பட்டார்.
ஆ) இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ____ ஆவார்.
இ) சாத்தனூர் அணை ____ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது ?
ஈ) ____ ஆம் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
உ) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் ____
30. முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி ?
31. 1857 ஆம் ஆண்டின் பெரும்புரட்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும் ?
32. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
33. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி ?
34. அ) வேறுபடுத்துக.
1) வானிலை – காலநிலை
2) வண்டல்மண் – கரிசல் மண்
ஆ) காரணம் கூறுக.
1) மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை
35. தமிழ்நாட்டில் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
36. நகரமயமாக்கம் என்றால் என்ன ? அதன் சிக்கல்கள் யாவை ?
37. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி ?
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41. கீழ்க்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக.
1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட ஏதேனும் ஐந்து முக்கிய வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்
1) மொராக்கோ 2) ஜெர்மனி 3) சான்பிரான்சிஸ்கோ 4) ஹிரோஷிமா 5) ஹவாய் தீவுகள்

பகுதி – IV 2x8=16

IV பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

43. அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீர போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக. (அல்லது)
ஆ) இந்தியாவின் பிரிவினைக்கு பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.
44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்
1) தக்காண பீடபூமி 2) மலைக்காடுகள் 3) மகேந்திரகிரி
4) காவிரி டெல்டா 5) மன்னார் வளைகுடா 6) பாமிர் முடிச்சு
7) சென்னைக்கும் டெல்லிக்கும் செல்லும் இரயில் வழி பாதை 8) ஹிராகுட் அணை (அல்லது)
ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்
1) கன்னியாகுமரி 2) வனவிலங்கு சரணாலயம் (ஏதேனும் ஒன்று) 3) பாக்ஜலசந்தி
4) குற்றாலம் நீர்வீழ்ச்சி 5) விமான நிலையம் ஒன்று 6) காஞ்சிபுரம் 7) சென்னை 8) [illegible]

***/***

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# SECOND REVISION TEST - 2024

Standard - X

SOCIAL SCIENCE

Time: 3.00 hrs Marks:100

PART - I

14x1=14

I Answer all the questions.

1. Which Country was expelled from the League of Nations belong?
   a) Germany b) Russia c) Italy d) France
2. With whose conquest did the Mexican civilization collapse?
   a) Herman Cortes b) Francisco Pizarro
   c) Toussaint Louverture d) Pedro I
3. When was the Warsaw Pact dissolved?
   a) 1979 b) 1989 c) 1990 d) 1991
4. Assertion : The Justice party continued to remain in Government from 1920-1937 in Madras Presidency.
   Reason : The Congress party boycotted the Madras Legislature during this period of Dyarchy.
   a) Both A and R are correct b) A is correct but R is not the correct explanation
   c) Both A and R are wrong d) R is correct, but it has no relevance to A
5. Who set up the Sathyagraha camp in Udayavanam near Madras?
   a) K. Kamaraj b) C. Rajaji c) K. Santhanam d) T. Prakasam
6. _________ is not a part of the world network biosphere reserves of UNESCO.
   a) Nilgiri b) Agasthiyamalai c) Great Nicobar d) Kachch
7. The city which is called as the Manchester of South India is
   a) Chennai b) Salem c) Madurai d) Coimbatore
8. The National Remote Sensing Centre (NRSC) is located at _______
   a) Bengaluru b) Chennai c) Delhi d) Hyderabad
9. The highest peak in Tamil Nadu is _______
   a) Anaimudi b) Doddabetta c) Mahendragiri d) Servarayan
10. The highest sex ratio is found in _______
    a) Salem b) Dharmapuri c) Nilgiris d) Theni
11. The speaker of a state is a
    a) Head of state b) Head of Government
    c) President's agent d) None of these
12. How many countries share its border with India?
    a) 5 b) 6 c) 7 d) 8
13. Who granted the English "Golden Fireman" in 1632?
    a) Jahangir b) Sultan of Golconda c) Akbar d) Aurangazeb
14. A government's ability to raise taxes is called
    a) Taxation b) Fund raising c) Fiscal capacity d) Fees

PART - II

10x2=

II Answer any 10 questions. Question No.28 is compulsory.

15. What were the three millitantant forms of nationalism in Europe?
16. What were the duties of the Palayakkarars?
17. Highlight the objectives of Home Rule Movement?
18. List out the contribution of the moderates?
19. Estimate Periyar as a feminist.
20. List the factors affecting climate of India.

Ilahi high school YouTube Channel
Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

Scanned with CamScanner

21. Mention the plantation crops of India.
22. Define "International trade".
23. State the boundaries of Tamil Nadu.
24. Name the important multipurpose projects of Tamil Nadu.
25. What is the qualification of judges of the supreme Court?
26. List out the member countries of SAARC.
27. Write some names of the nutrition programmes in Tamil Nadu.
28. Define Start up India scheme.

## PART - III

III Answer any 10 questions. Question No.42 is compulsory. 10x5=50

29. Fill in the blanks
    i) Boers were also known as ________
    ii) The first woman legislator in India was ______
    iii) Sathanur dam is constructed across the river ________
    iv) The term globalization invented by _______
    v) India conducted its first nuclear test at ______
30. Discuss the main causes of First World War.
31. Discuss the causes of the Revolt of 1857.
32. Discuss the circumstances that led to the Reform movements of 19th century.
33. Give an account on the major peninsular rivers of India.
34. a) Differentiate the following
    i) Weather and climate
    ii) Alluvial Soils and Black soils.
    b) Give reasons:
    Mountains are cooer than the plains
35. Explain any two geographical factors that determine agriculture.
36. What is urbanization? Explain its problems.
37. Trace the reason for the formation of BRICS and write its objectives.
38. What are the powers and functions of the Chief Minister?
39. Write the challenges of Globalization.
40. Explain some direct and indirect taxes.
41. Draw a Timeline for any five historical events from 1930 to 1950.
42. Mark the following places on the map of world.
    i) Moracco ii) Germany iii) San Francisco iv) Hiroshima
    v) Hawaii Island

## PART - IV

IV Answer the following questions : 2x8=16

43. a) Attempt an essay on the heroic fight Veerapandya Kattabomman conducted against the East India company. (Or)
    b) Discuss the reasons behind the partitions of India.
44. a) **Mark the following places on the given outline map of India**
    i) Deccan plateau ii) Mountain forests iii) Mahendragiri iv) Kaveri Delta
    v) Gulf of Munnar vi) Pamir Knot vii) Rail route from Chennai to Delhi
    viii) Hirakud Dam (Or)
    b) **Mark the following places on the given outline map of Tamilnadu.**
    i) Kanyakumari ii) Wildlife Sanctuary iii) Palk Strait iv) courtallam water falls
    v) Mark any one airport vi) Kanchipuram vii) Chennai viii) Vaigai river

Padasalai.Net
Ilam Kalvi School YouTube Channel



Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

## பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல்

நேரம்: 3.00 மணி | மதிப்பெண்கள்:100

பகுதி – I

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 14x1=14

1. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டு சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது ?
   அ) ஜெர்மனி ஆ) ரஷ்யா இ) இத்தாலி ஈ) பிரான்ஸ்
2. யாருடைய ஆக்கிரமிப்பின் போது மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று ?
   அ) ஹெர்மன் கோர்ட்ஸ் ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
   இ) தௌசெயின்ட் லாவெர்ட்டூர் ஈ) முதலாம் பெட்ரோ
3. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது ?
   அ) 1979 ஆ) 1989 இ) 1990 ஈ) 1991
4. சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
   கூற்று : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.
   காரணம் : இக்காலக்கட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தை புறக்கணித்தது.
   அ) காரணம், கூற்று ஆகியவை சரி
   ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல
   இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு
   ஈ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை
5. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார் ?
   அ) K. காமராஜ் ஆ) C. இராஜாஜி இ) K. சந்தானம் ஈ) T. பிரகாசம்
6. யுனெஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோள பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது ______
   அ) நீலகிரி ஆ) அகத்திய மலை இ) பெரிய நிக்கோபார் ஈ) கட்ச்
7. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம்
   அ) சென்னை ஆ) சேலம் இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்
8. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் ______
   அ) பெங்களூர் ஆ) சென்னை இ) புதுடெல்லி ஈ) ஹைதராபாத்
9. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் ______ ஆகும்.
   அ) ஆனைமுடி ஆ) தொட்டப்பெட்டா இ) மகேந்திரகிரி ஈ) சேர்வராயன்
10. பாலின விகிதம் அதிகம் கொண்ட மாவட்டம் ______
    அ) சேலம் ஆ) தர்மபுரி இ) நீலகிரி ஈ) மதுரை
11. மாநில சபாநாயகர் ஒரு
    அ) மாநிலத் தலைவர் ஆ) அரசின் தலைவர்
    இ) குடியரசுத் தலைவரின் முகவர் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை
12. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன ?
    அ) 5 ஆ) 6 இ) 7 ஈ) 8
13. 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மேன்" வழங்கியவர் யார் ?
    அ) ஜஹாங்கீர் ஆ) கோல்கொண்டா சுல்தான் இ) அக்பர் ஈ) ஔரங்கசீப்
14. வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறனை ______ என்கிறோம்.
    அ) வரிவிதிப்பு ஆ) நிதி உயர்வு இ) நிதித்திறன் ஈ) கட்டணங்கள்

பகுதி – II

II எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்.
வினா எண் 28க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். 10x2=20

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை ?
16. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை ?
17. தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.
18. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com
Scanned with CamScanner

19. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
20. காலநிலையைப் பாதிக்கும் காரணிகளைப் பட்டியலிடுக.
21. இந்தியாவின் தோட்டப்பயிர்களைக் குறிப்பிடுக.
22. பன்னாட்டு வணிகம் – வரையறு.
23. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
24. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்கு திட்டங்களின் பெயர்களை எழுதுக.
25. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை ?
26. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.
28. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் வரையறு ?

## பகுதி – III

III ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 42க்கு கட்டாயம் விடையளிக்கவும்) 10x5=50

29. அ) போயர் ______ என்றும் அழைக்கப்பட்டனர்.
   ஆ) இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ______ ஆவார்.
   இ) சாத்தனூர் அணை ______ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
   ஈ) ______ ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
   உ) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் ______
30. முதல் உலகப் போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி ?
31. 1857 ஆம் ஆண்டின் பெரும்புரட்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும் ?
32. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
33. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி ?
34. அ) வேறுபடுத்துக.
   1) வானிலை – காலநிலை
   2) வண்டல்மண் – கரிசல் மண்
   ஆ) காரணம் கூறுக.
   1) மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை
35. தமிழ்நாட்டில் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
36. நகரமயமாக்கம் என்றால் என்ன ? அதன் சிக்கல்கள் யாவை ?
37. பிரிக்ஸ் (BRICS) கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் மற்றும் அதன் நோக்கங்களை எழுதுக.
38. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி ?
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41. கீழ்க்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக.
   1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட ஏதேனும் ஐந்து முக்கிய வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்
   1) மொராக்கோ 2) ஜெர்மனி 3) சான்பிரான்சிஸ்கோ 4) ஹிரோஷிமா 5) ஹவாய் தீவுகள்

## பகுதி – IV

IV பின்வரும் வினாக்களுக்கு விடையளி. 2x8=16

43. அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீர போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
   (அல்லது)
   ஆ) இந்தியாவின் பிரிவினைக்கு பின்னால் இருந்த காரணங்களை விவாதிக்கவும்.
44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்
   1) தக்காண பீடபூமி 2) மலைக்காடுகள் 3) மகேந்திரகிரி
   4) காவிரி டெல்டா 5) மன்னார் வளைகுடா 6) பாமீர் முடிச்சு
   7) சென்னைக்கும் டெல்லிக்கும் செல்லும் இரயில் வழி பாதை 8) ஹிராகுட் அணை
   (அல்லது)
   ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்
   1) கன்னியாகுமரி 2) வனவிலங்கு சரணாலயம் (ஏதேனும் ஒன்று) 3) பாக்ஜலசந்தி
   4) குற்றாலம் நீர்வீழ்ச்சி 5) விமான நிலையம் ஒன்று 6) காஞ்சிபுரம் 7) சென்னை 8) வைகை நதி

***/***

Padasalai.Net
Ishwarya school YouTube Channel



Scanned with CamScanner